DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free copy!

தேவனோடு உங்கள் நடை

நாம் தான் நடக்க வேண்டும்

(பகுதி 2)

இரண்டு நபர்களுக்குள் இருக்கும் ஒவ்வொரு நெருக்கமான உறவுக்கும், தொடர்ச்சியான, இரு வழி தொடர்பு அவசியமானது. இல்லையெனில், அந்த உறவு நிலைத்திருக்காது. திருமணம் இதற்கு நல்ல உதாரணமாகும். ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் உண்மையான அன்புடனும், தங்கள் திருமணத்தை வெற்றியடைய செய்ய வேண்டும் என்ற உண்மையான வாஞ்சையுடனும் ஒரு ஆணும் பெண்ணும் திருமணத்திற்குள் பிரவேசிக்கலாம். ஆனால் தங்களிடையே தொடர்ச்சியான, சுதந்திரமான தொடர்பை அவர்கள் ஏற்படுத்தி அதை உறுதிப்படுத்தா விட்டால், அவர்கள் திருமணம் சீக்கிரத்தில் முறிய ஆரம்பிக்கும். தேவனோடு கிறிஸ்தவனுக்கு இருக்கும் உறவை குறித்தும் இது உண்மையாகும். தொடர்ச்சியான, உண்மையுள்ள, இரு வழி தொடர்பின்றி அது ஒரு போதும் வெற்றி பெறாது. தேவனோடு தொடர்ந்து பேசவும், தேவன் நம்மோடு தொடர்ந்து பேச அனுமதிக்கவும் நாம் கற்றுக்கொள்ள

தேவன் எப்படி பேசுகிறார்

தேவன் நம்மோடு எப்படி பேசுகிறார்? பிரதானமாக அவருடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதத்தின் மூலம். விசுவாசிகளுக்கு தேவன் பொதுவாக சொல்ல விரும்பும் அனைத்திற்கும் வேதமே அடிப்படையாகும். தேவன், நம்மிடத்தில் பொதுவாக வேதத்தில் கூறுபவைகளை நாம் தேடி பார்க்காமல், அவர் நம்மோடு விசேஷித்த, தனிப்பட்ட விதத்தில் பேசுவார் என எதிர்ப்பார்ப்பதற்கு நமக்கு எந்த உரிமையுமில்லை.

தேவனிடமிருந்து வரும் எல்லா உண்மையான தொடர்புக்கு வேதம் அடிப்படையாக உள்ளது மட்டுமல்ல, வேறு எந்த தொடர்பையும் சோதித்து பார்க்கும் அளவுகோலாகவும் அமைய வேண்டும். ஆனால் வேதத்தை மட்டுமே வாசித்தல் போதாது. 2 கொரிந்தியர் 3:6ல் பவுல், எழுத்து கொல்லுகிறது, ஆவியே உயிர்ப்பிக்கிறது என கூறுகிறார். பரிசுத்த ஆவியானவரில்லாமல், வேதத்தின் பக்கங்களில் நம்முடைய கண்முன் இருப்பவையெல்லாம் செத்த எழுத்துக்களாகவே இருக்கும். ஆனால் இவ்வெழுத்துக்கள் பரிசுத்த ஆவியானவரின் வாய்க்காலாக மாறும் போது, அவைகளை நாம் வெறுமையாய் காண்பதில்லை. அவற்றை தேவனுடைய சொந்தக் குரலாக நம்முடைய இருதயத்தில் நேரடியாகவும், தனிப்பட்ட விதத்திலும் பேசக் கேட்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன் இதை என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தில் நான் நிரூபித்துள்ளேன். ஒரு தத்துவயியல் நிபுணராக, வேறு எந்த தத்துவயியல் படைப்பையும் அணுகும் ஆராய்ச்சி முறையில், நான் வேதத்தை படிக்க முற்பட்டேன். தொலைதூர, சாரமில்லாத, புறியாத புத்தகமாகவே அதை நான் கண்டேன். கடமை உணர்வே என்னை அதை தொடர்ந்து படிக்க வைத்தது. சுமார் ஒன்பது மாதங்கள் கழிந்து, இயேசுவை தேவனுடைய குமாரனாக எனக்கு தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தி, தேவன் என்னை பரிசுத்த ஆவியால் நிறைத்தார். அடுத்த நாள், நான் தொடர்ந்து படிப்பதற்கு வேதத்தை திறந்த போது, ஏற்பட்டிருந்த மாற்றத்தை குறித்து நான் வியப்படைந்தேன். முழு பிரபஞ்சத்திலும், இரண்டே நபர்களிருந்தது போல தோன்றியது - தேவனும் நானும். நான் படித்த ஒவ்வொரு வார்த்தையும், தேவன் என்னோடு தனிப்பட்ட முறையில் பேசினார். இப்படித்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் தன்னுடைய வேதாகமத்தை வாசிக்க வேண்டும்.

வேதத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவர் நம்முடன் பேசுவதை கேட்க, நாம் நிறைவேற்ற வேண்டிய சில முக்கிய நிபந்தனைகள் உண்டு.

தவறான மனநிலைகளை அகற்றுங்கள்

முதலாவது தவறான மனநிலைகள் அல்லது உறவுகளை நாம் அகற்றவேண்டும். ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் இருதயத்தில் நாட்டப்பட்டதாயிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என யாக்கோபு கூறுகிறார் (யாக்கோபு 1:21). அழுக்கு

THE TEACHING LEGACY OF DEREK PRINCE

DEREK PRINCE
MINISTRIES - INDIA
www.derekprince.in
ISSUE #046

என்பதை அசுத்தமான, கட்டுக்கடங்காத கற்பனைகள் என்று விளக்கலாம். துர்க்குணம் என்பதை தேவனோடு வாக்குவாதம் செய்வது அல்லது எதிர்த்து பேசுவது என்று கூறலாம். அது சாந்தத்திற்கு எதிர்மறையானது. அதே பாணியில் பேதுரு, இப்படியிருக்க....சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு.....திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் எனக்கூறுகிறார் (1 பேதுரு 2:1-2). வேதத்தின் மூலம் தேவன் பேசுகிறதை நாம் கேட்க வேண்டிய விதத்தில் கேட்க, இங்கு பட்டியலிடப்பட்டிருக்கும் தவறான மனநிலைகளை நாம் அகற்றவேண்டும். இப்படிப்பட்ட மனநிலைகளை அகற்றுதல், வேதத்தை நாம் சாந்தத்தோடும், கற்றுக்கொள்ளக்கூடிய ஆவியோடும் அணுக நமக்கு உதவும்.

மாற்கு 10:14 - 15ல், தேவனுடைய ராஜ்யத்தின் சத்தியத்தை பெற்றுக்கொள்ளும் விதத்திற்கு, ஒரு சிறு பிள்ளையை முன்மாதிரியாக நிறுத்துகிறார். இயேசு இங்கு வலியுறுத்தும் அச்சிறு பிள்ளையின் மனநிலையில் முக்கிய தன்மை, அதின் கற்றுக்கொள்ளக்கூடிய சுபாவமாகும். எந்த பாரபட்சம் அல்லது முன்முடிவுகள் இல்லாது கற்றுக்கொள்ள ஒரு ஆயத்தம். சங்கீதம் 25:5ல் தாவீது ராஜா, வேதத்தை நாம் திறக்கும் போது, நம்மெல்லாருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கக்கூடிய ஜெபத்தை செய்கிறார்: உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னை போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன். அமைதலான, பொறுமையோடு காத்திருக்கும் ஒரு மனநிலையை இவ்வசனம் முன்வைக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசுவதை கேட்பது மிக முக்கியமாக இருப்பதால், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் முக்கியமான காரியங்களின் வரிசையில், இது மிகவும் மேலோங்கி நிற்க வேண்டும்.

உங்கள் கடமைகளை நிர்வகியுங்கள்

தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபத்தில் இக்கருத்து மிக நன்றாக வெளியாகிறது: நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் (சங்கீதம் 90:12). மோசே கூறுவதை வேறு விதமாக சொன்னால், தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவரிடமிருந்து மட்டும் வரும் மெய் ஞானத்தை பெற நாங்கள் நேரமுடையவர்களாயிருக்க, எங்கள் கிரியைகளையும் கடமைகளையும் வரிசைப்படுத்த எங்களுக்கு உதவும் என்பது தான். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் (நீதிமொழிகள் 2:6).

வேதத்தின்படி செய்கிறவர்களாய் இருங்கள்

தம்முடைய நிருபத்தில் யாக்கோபு எச்சரிப்பது போல, நாம் தேவனுடைய வார்த்தையை கேட்டால் மட்டும் போதாது. அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக்கோபு 1:22). தேவனுடைய வார்த்தையை கேட்பது, கண்ணாடியை பார்ப்பது போலாகும் என்று அவர் தொடர்ந்து கூறுகிறார். தேவனுக்குப் பிரியமில்லாத நம்முடைய வாழ்க்கையின் பகுதிகளை அது நமக்கு காண்பிக்கிறது. கண்ணாடி காண்பிக்கும் குறைகளை மாற்றினால் அல்லது சரி செய்தால் மட்டுமே அதினால் நமக்கு பயன் உண்டு.

வேதாகம உபதேசத்தை புரிந்துகொள்வதற்கு திறவுகோலாய் திகழும் வாக்குத்தத்தை இயேசு யோவான் 7:17ல் நமக்கு கொடுக்கிறார்: அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். கற்றுக்கொள்வதை செயல்படுத்த ஆயத்தமாயிருப்பவர்களுக்கே உபதேசத்தை அறிந்துகொள்ள அளிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்படிதல் நம்மை இன்னும் சத்தியத்திற்குள் நடத்துகிறது, ஆனால் கீழ்ப்படியாமையே, சத்தியத்தை தடை செய்து நம்மை பிழைகளுக்குள் திரும்ப செய்கிறது.

ஜெபியுங்கள்

இவ்விதமாய் வேதத்தை வாசித்தால், நாம் தேவனுடைய சத்தத்தை கேட்கிறோம். ஆனால் நமக்கு அவரோடிருக்கும் தொடர்பில் இது ஒரு பகுதி தான். அடுத்த பகுதி ஜெபிப்பதாகும். உன்னதப்பாட்டில், மணவாளன் மணவாட்டியை பார்த்து, உன் முக ரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும், உன்முக ரூபம் அழகுமாயிருக்கிறது என்றார் (உன்னதப்பாட்டு 2:14). விசுவாசிக்கிற தம்முடைய மக்களாக குறித்த கிறிஸ்துவின் மனநிலையை இது வெளிக்காட்டுகிறது: அவர் நம்முடைய சத்தத்தை கேட்கவும், நம்முடன் நெருங்கிய உறவுகொள்ளவும் வாஞ்சையாய் இருக்கிறார். ஜெபத்தில் நாம் தேவனிடம் வரும்போது அவர் கண்டுக்கொள்ளாதவருமல்ல, எட்டமுடியாதவருமல்ல என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மாறாக நம்முடைய ஜெபங்களை கேட்கவும், அவைகளுக்கு பதிலளிக்கவுமே அவர் வாஞ்சிக்கிறார்.

உறவு மிக முக்கியமானது

ஜெபம், வெறும் கோரிக்கைகளை முன் வைப்பதற்கு அப்பாற்பட்டது - அதாவது, தேவைகளின் பட்டியலை தேவனுக்கு முன் வைப்பதல்ல. கர்த்தருடைய ஜெபத்தை நாம் பார்க்கும்போது, அதின் முதல் பாதி, தேவனுக்கு முன்பாக நம்மை சரியான மனநிலையில் நிறுத்த முற்படுகிறது. அதற்கு பின்பு தான் நம்முடைய வேண்டுதல்களை முன் வைக்க உற்சாகப்படுத்தப்படுகிறோம். இயேசு நமக்கு, உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார் என நினைப்பூட்டுகிறார் (மத்தேயு 6:8). தேவன் ஏற்கெனவே அறிந்திருக்கும் நம்முடைய தேவைகளை அவருக்கு அறிவிப்பது ஜெபத்தில் முக்கியமல்ல. நம்முடைய தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும் என்ற உறுதியை பெறும் அளவிற்கு அவருடன் ஓர் உறவை ஏற்படுத்துவதே நம்முடைய நோக்கம்.

நம்முடைய திறமையை மட்டுமே சார்ந்துக்கொண்டால், நாம் ஜெபிக்க வேண்டிய விதமாய் ஜெபிக்க முடியாது. இதை அறிந்த தேவன், வேதத்தை விளக்க நமக்கு தந்த நபரையே, ஜெபத்திலும் நமக்கு உதவ ஏற்படுத்தியுள்ளார் - அவர்தான் பரிசுத்த ஆவியானவர். ரோமர் 8:26 - 27ல் நம்முடைய ஜெபங்களில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை பவுல் விளக்குகிறார்:

> *அந்தப்படியே ஆவியானவரும் நமதுபலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

பவுல் இங்கு பெலவீனங்களை குறித்து பேசுகிறார். இதை அவர் சொல்லும் போது சரீர பெலவீனத்தை குறித்து பேசாமல், நம்முடைய ஜென்ம சுபாவத்திலுள்ள ஒரு பெலவீனத்தை குறித்தே சொல்லுகிறார். இந்த பெலவீனம் இரண்டு விதங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் நாம் ஜெபிக்க வேண்டும் என்பது நமக்கு தெரிகிறது ஆனால் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று அறியாதிருக்கிறோம்.

மற்ற நேரங்களில், நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பது தெரிகிறது ஆனால் அதற்காக எப்படி ஜெபிப்பதென்று அறியாதிருக்கிறோம். சூழ்நிலைக்கேற்ப, பரிசுத்த ஆவியான வர் நமக்கு தேவையான உதவியை பகிர்ந்தளிக்கிறார். எப்படி ஜெபிக்க வேண்டும்? எதற்காக ஜெபிக்க வேண்டும்? என்ற இரண்டு காரியங்களையும் நமக்கு காண்பிக்கிறார். தேவனுக்கு ஏற்புடைய ஜெபம் எதுவென்றால், நாம் பரிசுத்த ஆவியானவரின் மூலம் முதலாவது தேவனிடமிருந்து பெற்ற ஜெபமே.

ஆவியினால் நடத்தப்பட்டவர்கள்

பரிசுத்த ஆவியானவர் மீது நம்முடைய சார்வு, இதையும் கடந்து செல்லுகிறது. வேதத்தை புரிந்துக்கொள்வது மற்றும் ஜெபிப்பதோடு அது நின்று விடுவதில்லை. கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், நம்மை நடத்த, பரிசுத்த ஆவியான வர், தேவனால் நியமிக்கப்பட்ட வழிகாட்டியாவார். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 8:14). ஆகையால் பரிசுத்த ஆவியானவரோடு நமக்கு இரட்டை உறவு இருப்பதை நாம் காண்கிறோம். கடந்த போதனை கடிதத்தில் நாம் குறிப்பிட்ட வாசல் மற்றும் வழி என்ற சித்திரத்திற்கு இது ஒத்திருக்கிறது (மத்தேயு 7:14ஐ பார்க்கவும்). தேவனுடைய பிள்ளைகளாய் மாற, பரிசுத்த ஆவியால் நாம் பிறந்திருக்க வேண்டும் (யோவான் 1:12, 13: 3:1-8ஐ பார்க்கவும்). இது வாசலுக்குள் நுழைவதாகும். அதன் பின், தேவனுடைய புத்திரராய் வாழ, நாம் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும். இது வழியில் நடப்பதாகும்.

புதிய பிறப்பின் வாசலுக்குள் நாம் நுழைந்த பின், அநேக நேரங்களில் ஒரு மறைமுக சோதனை நமக்கு எதிர்ப்படும். மத சட்டங்களை பின்பற்றி நடப்பதை, பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட வழிநடத்துதலுக்கு மாற்றாக ஏற்படுத்தத் தூண்டும் சோதனை. நான் ஜெபித்து, ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் என் வேதத்தை வாசித்து, சபைக்கு சென்று என்னுடைய தசமபாகத்தை ஒழுங்காக கொடுத்து, சில விதமான சிற்றின்பங்கள் மற்றும் பொழுதுப்போக்குகளை நான் தவிர்த்தால், வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும் என்று கூறிக்கொள்ளுகிறோம். ஆனால் அது வெற்றிப்பெற செய்யாது! இத்தகைய சட்டங்களும் - இன்னும் பல சட்டங்களும் - நன்மையாகவும், விரும்பக்கூடியவைகளாகவும் இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரோடிருக்கும் தனிப்பட்ட ஐக்கியத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் இவை மாற்று வழியாகாது.

மதச்சட்டங்களில் நாம் நம்பிக்கை வைப்பதினால், பரிசுத்த ஆவியானவரை அவமானப்படுத்துகிறோம். தேவையான அனைத்தும் நாம் சட்டங்களை கொண்டே செய்ய முடியுமானால், தேவன் பரிசுத்த ஆவியானவரை நமக்கு எதற்கு கொடுக்க வேண்டும்? இந்த தவறைத்தான், கலாத்தியர் செய்துகொண்டிருந்தார்கள். பவுல் எழுதுகிறார், ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரோ? (கலாத்தியர் 3:3). நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் துவங்கும் பணியை அவர் மட்டுமே செய்து முடிக்க முடியும்.

பரிசுத்த ஆவியானவரின் சத்தம்

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட வேண்டிய இந்த அவசியத்தால் எதிர்கொள்ளப்படும் கிறிஸ்தவர்கள், அநேக நேரங்களில், பரிசுத்த ஆவியானவர் தான் என்னை நடத்துகிறார் என்று நான் எப்படி உறுதியாக சொல்ல முடியும்? அவருடைய சத்தத்தை நான் எப்படி அறிய முடியும்? என்று கேட்பார்கள். சில நேரங்களில் இக்கேள்விக்கு பதிலளிக்க, நான் இன்னொரு கேள்வியை கேட்பேன்: தொலைபேசி ஒலி கொடுக்க, நான் அதை எடுத்து பேசும்போது, மறு பக்கத்தில் இருப்பது என் மனைவி தான் என்பது எப்படி தெரியும்? அவளுடைய குரலை நான் எப்படி அடையாளம் காண்கிறேன்? என் மனைவியை நான் அறிந்திருக்கிறபடியால், அவளுடைய குரலை நான் அடையாளம் காண்கிறேன் என்பதே இதற்கு பதில். என் மனைவியோடிருக்கும் நெருங்கிய பழக்கத்தினால், அவளுடைய குரலை அறிவது எனக்கு எளிதாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரோடு நமக்கிருக்கும் உறவிலும் இது உண்மை. ஆவியானவரின் சத்தத்தை நாம் அறிந்துக்கொள்ள, ஆவியானவரோடு நமக்கு ஒரு நெருக்கமான பழக்கம் இருக்க வேண்டும். பல கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை ஏற்பதில்லை. பிதாவாகிய தேவன் ஒரு நபர் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். குமாரனாகிய கிறிஸ்து ஒரு நபர் என்றும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஆவியானவரை குறித்தும் இது உண்மை என்பதை அவர்கள் காண்பதில்லை. ஆனால் அவரும் பிதாவையும் குமாரனையும் போன்ற ஒரு நபர் தான். பிதாவையும் குமாரனையும் நாம் எப்படி தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்கிறோமோ, அதே விதத்தில் நாம் அவரையும் அறிய வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரை நாம் இன்னும் எவ்வளவு அறிந்துக்கொள்ளுகிறோமோ, அவ்வளவு தெளிவாக அவருடைய சத்தத்தை நாம் கேட்டு, அவருடைய நடத்துதலின் வெவ்வேறு வழிகளையும் நாம் அறிந்துக்கொள்வோம். திருமணமான தம்பதியர், பல காலம் ஒன்றாய் வாழ்ந்தப்பின், வார்த்தைகளைக்கொண்டு விவரிக்கப்பட தேவையில்லாத விதத்தில் அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ள கற்றுக்கொள்ளுகிறார்கள். அமைதல், முகத்தை சுழித்தல், மென்மையான தொடுதல், ஒரு விசேஷ பார்வை - முழு வாக்கியம் அறிவிக்கக்கூடிய விஷயங்களை விட இவைகள் அதிகமானதை அறிவிக்கின்றன.

பரிசுத்த ஆவியானவரோடிருக்கும் உறவிலும் இது நடக்கக்கூடும். அவர் எப்போதும் சொற்களால் கட்டளை கொடுப்பதில்லை. நம்மை வழிநடத்த அவரிடம் பல்வேறு வழிகள் உண்டு: எச்சரிப்பு கொடுக்கும் ஓர் உள் உணர்வு, அங்கீகரிக்கவில்லை என்று காட்டும் மௌனம், உற்சாகமூட்டும் ஒரு இதமான உணர்வு, முன் ஆலோசனையில்லாமல் சிலவற்றை செய்ய தூண்டுதல். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நாம் எவ்வளவு உணர்வுள்ளவர்களாய் மாறுகிறோமோ, அவ்வளவு அதிகமாய் இவ்வுலகத்தில் நாம் தேவனுடைய உண்மை புத்திரராய் சமாதானத்தோடும், உறுதியோடும் நடை போடுகிறோம்.

நாம் தடுமாறினால் என்ன?

ஒருவேளை நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் நாம் தடுமாறி விழுந்துவிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் தோல்வியடைந்து விட்டோம், அதை குறித்து ஒன்றும் செய்ய முடியாது என்று அர்த்தமாகுமா? நிச்சயமாக இல்லை! தாவீது ராஜாவின் ஊக்கமளிக்கும் வார்த்தைகள் இதோ: நல்ல

இன்னும் தேவையா?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

பதிவு செய்க!

- தயவு செய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

ISSUE #046

See over for address details...

மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார் (சங்கீதம் 37:23-24).

தாவீது இவ்வார்த்தைகளை தனிப்பட்ட அனுபவத்திலிருந்து எழுதினான். விழுவது என்றால் என்ன என்பது அவனுக்கு தெரியும். ஒரு காலகட்டத்தில், தன் சிநேகிதனின் மனைவியோடு விபச்சாரம் செய்து விட்டு, தன் குற்றத்தை மறைக்க, அம்மனிதனின் மரணத்திற்கு ஏற்பாடு செய்தான். சில காலத்திற்கு தன் பாவத்தை மறைக்க அவன் முற்பட்டான், ஆனால் நாத்தான் தீர்க்கதரிசியின் ஊழியத்தின் மூலம், தமது இரக்கத்தினாலே தேவன் அதை வெளிப்பட செய்தார். அறிக்கை மற்றும் மனந்திரும்புதலினால், தாவீது இறுதியில் மன்னிப்படைந்து மீண்டும் நிலைநிறுத்தப்பட்டான். (2 சாமுவேல், 11 மற்றும் 12ம் அதிகாரங்களை காண்க.)

தன் பாவத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாகும் வரை, தாவீது அனுபவித்த சரீர மற்றும் மன உளைச்சலை, சங்கீதம் 32:3 - 5ல் தீர விவரிப்பதை காண்கிறோம்:

> *நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.*

நீர் மன்னித்தீர்! என்ற அந்த இறுதி வாக்கியத்திற்காக தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். தேவனுடைய மன்னிப்பை பெற முடியாத அளவிற்கு உங்கள் பாவம் பயங்கரமாக இருக்கிறதென்றோ அல்லது நீங்கள் உங்கள் மீறுதல் மிக அதிகமென்றோ, சாத்தான் உங்களை ஒப்புக்கொள்ள வைக்க அனுமதிக்காதீர்கள். எல்ல கிறிஸ்தவர்களையும் குற்றம் சுமத்துகிறவன் பிசாசு என்பதை மறந்து விடாதீர்கள். (வெளிப்படுத்தல் 12:10ஐ பார்க்கவும்.) எப்போதும் நாம் குற்ற உணர்வோடு, தகுதியற்றவர்கள் மற்றும் தோல்வியடைந்தவர்கள் என்று உணர வைப்பதே அவனுடைய இலக்கு. ஆனால் நம்முடைய பூரண மன்னிப்பிற்கும் சீர்பொருந்துதலுக்கும் தேவன் வழியை ஆயத்தம் செய்து விட்டார்.

விசுவாசியின் வாழ்வில் வரும் பாவத்துக்கு தேவன் ஆயத்தம் செய்திருக்கும் இரண்டு காரியங்களை, 1 யோவான் 2:1ல் நாம் காணலாம்: என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். இது தான் தேவனுடைய ஏற்பாட்டின் முதல் பகுதி: நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு தேவனுடைய கிருபையிலும் வல்லமையிலும் வைக்கும் விசுவாசத்தினாலே, பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுதலை பெற்று நாம் வாழமுடியும். (ரோமர் 6:1 - 14ஐ பார்க்கவும்.) ஆனால் யோவான் தொடர்ந்து, ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் என கூறுகிறார். இது தேவனுடைய ஏற்பாடின் இரண்டாவது பகுதி: நாம் பாவம் செய்து விட்டால், தாழ்மையோடு மனந்திரும்பி, நம்முடைய வழக்கறிஞராகிய இயேசு கிறிஸ்துவினிடம் நாம் திரும்ப வேண்டும். பிதாவாகிய தேவனிடத்தில் அவர் நம்முடைய வழக்கை எடுத்துச் சென்று, நமக்கு பூரண மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெற்று தருகிறார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9).

இப்படி மன்னிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டவர்களாய், எந்த குற்றமனசாட்சி அல்லது தகுதியற்ற உணர்வின்றி நாம் மறுபடியும் கிறிஸ்தவ வாழ்வின் நடையை தொடரலாம். அதிலும் நம்முடைய விசுவாசத்தை மேன்மைப்படுத்தி அல்ல, தேவனுடைய உண்மையை சிந்தித்தே முன்னேற வேண்டும்.

> *உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி..... பிலிப்பியர் 1:6*

> *உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். 1 தெசலோனிக்கேயர் 5:24*

அர்ப்பணிப்பின் ஜெபம்

தேவனோடு உங்களுக்கு இருக்கும் உறவில், இச்சமயத்தில் நீங்கள் இன்னும் முழுமையாக அர்ப்பணிக்க உங்களுக்குள் இப்போது ஒரு உணர்வு ஏற்பட ஆரம்பித்திருக்கலாம். அது ஒரு நல்ல வாஞ்சையே. அவரும் உங்களோடு இன்னும் நெருக்கமாக நடைபோட விரும்புகிறார் என்று நீங்கள் உறுதியாக இருக்கலாம். உங்கள் வாஞ்சையை வார்த்தைகளால் விவரிக்க, இந்த போதனையை பின் வரும் ஜெபத்தை ஒன்றாக செய்து முடிக்கலாம்:

அன்புள்ள ஆண்டவரே, உம்மோடு மிக நெருங்கிய உறவில் நடைபோடுவதே எனது வாஞ்சை. உமது வார்த்தையின் மூலம் நீர் என்னோடு பேசுவதை நான் கேட்க வாஞ்சிக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்கவும், நீர் எனக்கென்று விரும்பி வைத்திருக்கும் யாவற்றுக்குள்ளும் ஆவியினால் நடத்தப்பட வாஞ்சிக்கிறேன். இதை தடை செய்யும் எவ்வித மனநிலைகளை அகற்றவும், உம்முடைய வார்த்தையை தாழ்மையோடும், கற்றுக்கொள்ளும் மனப்பான்மையோடும் அணுக நான் அர்ப்பணிக்கிறேன்.

உமது உதவியோடு, நம்முடைய உறவில் இன்னும் உம்மை நெருங்கி சேர, எடுக்க வேண்டிய அடிகளை எடுத்து வைக்கவும், உமது ஆவியினால் இன்னும் நெருங்கிய தொடர்பிலும், தனிப்பட்ட ஐக்கியத்திலும், வழிகாட்டுதலிலும், நடத்தப்பட அர்ப்பணிக்கிறேன். நான் தடுமாறும் போது, மனந்திரும்பி உம்மிடம் வந்தால், உமது கையால் என்னை தூக்கி நிறுத்துவீர் என்பதற்காக நன்றி.

என்னில் துவங்கிய நற்கிரியையை நீர் செய்து முடிப்பீர் என்பதற்காக நன்றி. நீர் அதை நிறைவேறச்செய்வீர். உமது உண்மையில் நான் களிகூறுகிறேன். என்னை தொடர்ந்து உம்மிடம் நெருங்கி சேர இழுத்துக்கொள்வீர் என்று நன்றி கூறுகிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமேன்.

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince Ministries - India

Contact us

www.derekprince.in

admin@derekprince.in

Ph 9585538205

1-C EVR Road, 3rd Floor,(Opp. Chinthamani Mall), Puthur, Trichy - 620017

DEREK PRINCE MINISTRIES - INDIA

www.derekprince.in